செ.வெ.எண்:37 நாள்: 19.06.2021

**கரூர் மாவட்டம்**

**கரூர் மாவட்டத்தில் காவிரி ஆற்று நீர்வழித்தடங்களில் உள்ள வடிகால் வாரிகள் மற்றும் வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகள் ஒரு வாரத்திற்குள் முடிக்கப்படும் - தூர்வாரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தபின் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

**அதன் விபரம் வருமாறு:**

கரூர் மாவட்டத்தில் காவிரி ஆற்றுப் பாதுகாப்புக்கோட்டத்தில் வாரிகள் மற்றும் வாய்க்கால்கள் தூர்வாரப்படும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், குளித்தலை பகுதியில் கோட்டைமேடு வாரி, பனையூர் வாரி, இனுங்கூர் வாரி, சிவாயம் வாரி, வளையப்பட்டி வாரி, நங்கவரம்வாரி ஆகிய நீர்வழித்தடங்களில் நடைபெற்றுவரும் தூர்வாரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.06.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக ஜீன் 12ஆம் தேதி தண்ணீர் திறந்து விட்டுள்ளார்கள். அவ்வாறு திறந்துவிடப்பட்ட தண்ணீர் கடைமடை வரை செல்வதற்காக கரூர் மாவட்டத்தில் காவிரி ஆற்றுப் பாதுகாப்புக்கோட்டத்தில் உள்ள நீர்வழித்தடங்களில் இரண்டு வாய்க்கால்கள் மற்றும் 8 வடிகால் வாரிகளை தூர்வாருவதற்காக ரூ.160 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 28.05.2020 அன்று முதல் துவங்கி நடைபெற்றுவருகிறது.

இந்நிலையில், குளித்தலை பகுதியில் கோட்டைமேடு வாரி, பனையூர் வாரி, இனுங்கூர் வாரி, சிவாயம் வாரி, வளையப்பட்டி வாரி, நங்கவரம் ஆகிய நீர்வழித்தடங்களில் நடைபெற்றுவரும் தூர்வாரும் பணிகளை இன்று பார்வையிட்டேன்.

தூர்வாரும் திட்டத்தின் மூலம் கரூர் மாவட்டத்தில் புகளூர் மற்றும் நெரூர் ஆகிய பாசன வாய்க்கால்கள் 25.6கி.மீ நீளத்திற்கு தூர்வாரப்படுகின்றன. வதியம், கே.பேட்டை, மருதாண்டம் வடிகால் வாரிகள், பனையூர் வடிகால் வாரிகள், இனுங்கூர் வாரி, சிவாயம் வாரி, வளையப்பட்டி வாரி, மற்றும் குளித்தலை காட்டு வாரி ஆகிய வாரிகளில் 8 பணிகள் 35.00கி.மீ நீளத்திற்கும் தூர்வாரும் பணிகள் மொத்தம் 60.60 கிலோ மீட்டர் நீளத்திற்கு தூர்வாரப்படும் பணிகள் நடைபெறுகின்றது.

புகளூர் மற்றும் நெரூர் பாசன வாய்க்கால்கள் தூர்வாருவதன் மூலம் பாசன வாய்க்காலில் திறக்கப்படும் நீரை கடைமடை வரை தாங்கு தடை இன்றி வழங்க இயலும். இதன் மூலம் நன்னியூர்,வாங்கல்,நெரூர்,கோம்புபாளையம் மற்றும் புகளூர் ஆகிய 5 கிராமங்களைச் சேர்ந்த 9,704 ஏக்கர் பாசன நிலங்கள் முழுவதும் பாசன வசதி பெறுவது உறுதி செய்யப்படும்.

மேலும், மேற்கண்ட வடிகால்வாரிகளில் செடி கொடிகள் வளர்ந்து முட்புதர்கள் உள்ளதால் மழை காலங்களின் வெள்ள நீர் செல்ல இயலாத நிலையில் உள்ளது. மேற்கண்ட வடிகால் வாரிகளை தூர்வாருவதன் மூலம் வெள்ள நீர் தேங்கமால் எளிதாக வடிந்து அருகில் உள்ள பாசன நிலங்களில் பயிர் சேதம் ஏற்படமால் பாதுகாக்கப்படும். இதன் மூலம் வதியம், கே.பேட்டை, நச்சலூர், நங்கவரம், இனுங்கூர், சிவாயம், வளையப்பட்டி, புதுப்பட்டி, சீகம்பட்டி, வைநல்லூர், இராஜேந்திரம், மருதூர் உள்ளிட்ட 12 கிராமங்களைச்சேர்ந்த சுமார் 4,000 ஏக்கர் நிலங்கள் வெள்ளநீர் பாதிப்பில் இருந்து பாதுகாக்கப்படும்.

மேற்கண்ட பாசன வாய்க்கால்கள் தூர்வாரும் பணியினை பருவ மழைக்கு முன்பு முடிக்கவும் பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளும் ஒரு வாரகாலத்திற்குள் முடிக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, குளித்தலை கோட்டாட்சியர்(பொ) திரு.தவச்செல்வம், பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரத்துறை காவிரி ஆற்றுப் பாதுகாப்புக்கோட்ட உதவி செயற்பொறியாளர் திரு.வெங்கடேசன், உதவிப்பொறியாளர்கள் திரு.கார்த்திக், திரு.கொளஞ்சிநாதன் குளித்தலை வட்டாட்சியர் திரு.கலியமூர்த்தி உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.